## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **“தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்”** நாளை (15-03-2026, ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

## குற்ற வழக்குத் தொடர்வுத் துறை சார்பில்

# அரசு உதவி வழக்குரைஞர் - நிலை - 2 பணிக்கான பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, மார்ச் 14 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் அரசு உதவி வழக்குரைஞர் நிலை - 2 பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 45 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் உள்ள அரசு உதவி வழக்குரைஞர் நிலை - 2 வழக்குரைஞர்கள், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் பெருநகர் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் குற்ற வழக்குகளை நடத்துவர். அத்துடன் அவர்கள் மாற்றுப் பணியில் பல்வேறு அரசுத் துறைகளில் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிவர்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த அரசு உதவி வழக்குரைஞர் நிலை2ல் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதல் நிலை தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு பின் அப்பணியிடத்திற்கு 45 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட 45 நபர்களுக்கு அரசு உதவி வழக்குரைஞர் நிலை2 பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், குற்ற வழக்குத் தொடர்வுத் துறை இயக்குநர் ஜி.கிருஷ்ண ராஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் மாநகராட்சி, கோவில்வழி புதுரோடு பேருந்து நிறுத்தம் அருகில்

# ரூ.38.76 கோடி மதிப்பீட்டில் புதிய ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடம் கட்டும் பணி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

*திருப்பூர், மார்ச் 14 - தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில், மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ந.தினேஷ் குமார், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி, கோவில்வழி புதுரோடு பேருந்து நிறுத்தம் அருகில் பொதுப்பணித்துறையின் சார்பில் ரூ. 38.76 கோடி மதிப்பீட்டில் புதிய ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக கட்டடம் கட்டும் பணியை துவக்கி வைத்தார்.*

*அமைச்சர் தெரிவித்ததாவது :திருப்பூர் மாநகராட்சி, கோவில்வழி புதுரோடு பேருந்து நிறுத்தம் அருகில் திருப்பூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் பொதுப்பணித் துறை சார்பில் ரூ.38.76 கோடி மதிப்பீட்டில் தரை தளம் மற்றும் ஐந்து தளங்களுடன் 83,054.00 ச.அடி பரப்பளவில் தரை தளம் 15,672 ச.அடி பரப்பளவில் கார் பார்க்கிங், இரு சக்கர வாகன நிறுத்து மிடம், மின்சார அறை, ஓட்டுநர் அறை, ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பறை வசதிகளுடனும், முதல் தளம் 13,153 ச.அடி பரப்பளவில் உதவி ஆணையர்கள் அறைகள், எஸ்.டி.ஓ, டி.எஸ்.டி.ஓ அறைகள், ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான கழிப்பறை வசதிகளுடனும், இரண்டாம் தளம் 13,153 ச.அடி பரப்பளவில் உதவி ஆணையர்கள் அறைகள், எஸ்.டி.ஓ, டிஎஸ்டிஓ அறைகள், ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளி களுக்கான கழிப்பறை வசதிகளுடனும்,*

*மூன்றாம் தளம் 13,153 ச.அடி பரப்பளவில் துணை ஆணையர் 1 மற்றும் அவர்களது அதிகாரிகள், துணை ஆணையர் 2 மற்றும் அவர்களது அதிகாரிகள், உதவி ஆணையர், எஸ்.டி.ஓ, டி.எஸ்.டி.ஓ அறைகள், ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளி களுக்கான கழிப்பறை வசதிகளுடனும், நான்காம் தளம் 13,153 ச.அடி பரப்பளவில் பிராந்திய கூட்டு ஆணையர் மற்றும் அவர்களின் அதிகாரிகள், துணை ஆணையர் 3 மற்றும் அவர்களின் அதிகாரிகள் அறைகள், கருத்துரை மண்டபம், சந்திப்பு மண்டபம் மற்றும் ஐந்தாம் தளம் 13,153 ச.அடி பரப்பளவில் கூட்டு ஆணையர் புலனாய்வு மற்றும் அவர்களின் அதிகாரிகள், துணை ஆணையர் மற்றும் அவர்களின் ஏ.சி., எஸ்.டி.ஓ., எஸ்.டி.ஓ.எஸ் அறைகள், ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளி களுக்கான சந்திப்பு கழிப்பறை வசதிகளுடன் தலைமையறை 865 ச.அடி பரப்பளவிலும், போர்டிகோ 753 ச.அடி பரப்பளவிலும் கட்டப்படவுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.*

*இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியன், திருப்பூர் வணிகவரி இணை ஆணையர் சா. முகமது அர்சத், இணை ஆணையர் (நுண்ணறிவு), ப.விமலா, திருப்பூர் கோட்டம் துணை ஆணையர் (சட்டம்) தா.மைதிலி, திருப்பூர் கோட்டம் (நுண்ணறிவு) துணை ஆணையர் ச.பொன்னுசாமி,*

*திருப்பூர் மாநகராட்சி துணை ஆணையர்கள் (மண்டலம்-1), இரா. சோபனா, (மண்டலம் - 2) த.நல்லரசி, (மண்டலம் - 3 ) என்பது கு.நாகராஜி, திருப்பூர் மேல்முறையீட்டு துணை ஆணையர் ச.பாண்டிய ராஜன், பகுதி கழக செயலாளர் கேபிள் எஸ். என். குமார், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்கள் முத்தணம்பாளையம் பகுதி அவைத்தலைவர் கே.பி. கே.ஜெகநாதன், ஆடிட்டர் முத்துராமன், வட்ட கழக செயலாளர்கள் சௌந்தர், வேலுச்சாமி, மு.சிவசாமி, ராஜ், பகுதி கழக துணை செயலாளர் ரிதன்யா செந்தில், பிரதிநிதிகள் பெ. ஆனந்தன், பொண்ணுசாமி,*

*மாமன்ற உறுப்பினர்கள் கோமதி குமார், கவிதா நேதாஜி கண்ணன், பந்தல் சாமிநாதன், மாவட்ட முன்னாள் பொருளாளர் ரத்தின சாமி, பிஏபி பாசண வாய்க்கால் பகிர்மான குழு தலைவர் கேஆர். எஸ்.மணி, பொறியாளர் சின்னசாமி, தம்பி ஆஸ்கார் கண்ணன் ராஜ், ஆறுமுகம், ஆனந்த், பாலசுப்பிரமணியம், குமார், ரமேஷ், வேணுகோபால், மாரிமுத்து உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

# தி.மு.க. கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் **வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, **கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளராக** நியமிக்கப்படுகிறார்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 12.03.2026

# தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. மாணவர் அணி துணைச் செயலாளராகப் பொறுப்பு வகித்து வரும் திருமதி. **ஜெ. வீரமணி** அவர்கள் **கழக மாணவர் அணிச் செயலாளராக** நியமிக்கப்படுகிறார்.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 12.03.2026

## ஏ.டி.எம். இல்லாமலே நன்கொடைகளை வாரிச்சுருட்டிய ஒரு

# பிரதமர் இவ்வளவு தரம் தாழ்ந்து பேசுவதா?

ஒரு நாட்டின் பிரதமர் இவ்வளவு தரம் தாழ்ந்த பேச்சைப் பேச முடியுமா? இந்தக் கேள்வியைத்தான் மோடியின் திருச்சி பேச்சு எழுப்புகிறது தமிழ்நாட்டு மக்கள் பணத்தின் ஏ.டி.எம். ஒரு குடும்பத்தின் கையில் இருக்கிறது என்று எப்படி ஒரு பிரதமரால் பேச முடிகிறது?

இப்படி ஒரு உளறலுக்கு ஏதேனும் ஆதாரம் இருக்கிறதா? இதற்கு பதில் வேண்டாமா? ஏ.டி.எம். இல்லாமலே நன்கொடைகளை சட்ட விரோதமாக பல்லாயிரம் கோடிகளில் வாரிச் சுருட்டி நீதிமன்றத்தின் கண்டனத்திற்கு உள்ளானவர் இந்த உத்தமர் மோடி!

தேர்தல் பத்திரம் என்ற ஒன்றைக் கொண்டு வந்தாரே நினைவிருக்கிறதா?

கருப்புப் பணத்தை பாரத ஸ்டேட் வங்கி வழியாக வெள்ளையாக்கி தன்னுடைய பெயரால் உருவான அறக்கட்டளையில் கொட்டச் சொன்னவரே இந்த மோடி தான்! நிதியை வழங்குங்கள் உங்கள் பெயர்களை மறைத்து வைத்திருக்கிறோம் என்று சொல்லியவரும் இவர்தான்!

அனைத்துக் கட்சிகளுக்கும் வழங்கலாம் என்று பெயரளவில் சொல்லிக் கொண்டு பெரும்பகுதி நிதியை சுருட்டிக் கொண்டது பா.ஜ.க. 2019 இல் இருந்து 2024 வரை இவர்கள் சுருட்டிய தொகை, ரூ.8250 கோடி உச்ச நீதிமன்றம் தலையிட்டு இந்த நிதி சுருட்டல் சட்டவிரோதமானது என்று மோடியின் மண்டையில் ஓங்கி குட்டியது.

நிதி அளித்தவர் பட்டியலை வெளியிட பாரத ஸ்டேட் வங்கிக்கு உத்தர விட்டது.

மோடி மோசடிக்கு உடந்தையாக இருந்த அந்த வங்கிப் பட்டியலை வெளியிட மாத கணக்கில் தவணை கேட்டது!

உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை; அடுத்த சில நாட்களிலேயே வெளியிடவேண்டும் என்று ஆணையிட்டது!

அப்போதும் கூட நன்கொடையாளர்களின் பெயர்களை கண்டுபிடித்து விட முடியாமல் மூடி மறைக்கும் பட்டியலை வெளியிட்டது. மீண்டும் உச்ச நீதிமன்றம் தெளிவான பட்டியலை வெளியிட உத்தரவிட்டது இவை யெல்லாம் வங்கியின் முடிவுகள் அல்ல ;மேலிருந்து மோடி நிதி மோசடியை காப்பாற்ற அரசு எந்திரங்கள் நடத்திய திருவிளையாடல்!

பெயர் பட்டியல் வெளியான பிறகு பல அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்தன. மோடி பெயரிலான அமைப்புக்கு நன்கொடை வாரி வழங்குகிறவர்களுக்கு வரிச் சலுகைகள் காண்ட்ராக்ட் என்று வாரி வழங்கப்பட்டுள்ளன. இந்த விபரங்கள் இப்போதும் இணையத்தில் இருக்கின்றன.

ஊழலை சட்டமாக்கி உச்சநீதி மன்றத்தால் கண்டிக்கப்பட்டவர் தான் இப்போது ஏ.டி.எம். பற்றி இங்கே வந்து காதில் பூசுற்றுகிறார்.

தி.மு.க.வினர் 8 வயது குழந்தையை யும் விட மாட்டார்கள் என்ற மோடியின் பேச்சை மக்கள் நிச்சயம் வெறுக்கவே செய்வார்கள். குழந்தைகளை அரசியலுக்காக பாலுறவுக்குப் பயன்படுத்திய ‘எப்ஸ்டின் ஃ பைலில்’ மோடியின் பெயரும் இடம்பெற்று இருப்பதாக கூறுகிறார்கள்.


அந்த நினைவில் இருந்து இன்னும் மோடி விடுபடவில்லை போலும். சொல்லப்போனால் தொலைக்காட்சி விவாதங்களில் ஈடுபடும் பா.ஜ.க. பேச்சாளர்கள் கூட இப்படி பேசுவதற்கு கூசுவார்கள்.

இதுதான் அவரது ஆன்மீகக் கதை.



**விடுதலை இராஜேந்திரன்**
திராவிடர் விடுதலைக் கழகப் பொதுச் செயலாளர்

# சரித்திர விசித்திரம்!



**2026** சட்டமன்றப் பொதுத் தேர்தல்
சரித்திரம் காணா
விசித்திரமாக இருக்கப் போகிறது...

முதலிடத்தையும் முதல்வர் இருக்கையையும்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு
ஒதுக்கி வைத்துவிட்டு

இரண்டு மற்றும் மூன்றாம் இடங்கள் யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் திருவிழாவாக

அது இருக்கப் போகிறது..

தி.மு.க. vs அ.தி.மு.க. என்கிற
அரை நூற்றாண்டு கால தேர்தல் வரலாற்றை
தி.மு.க. vs என்.டி.ஏ. என திருத்தி எழுதப் பார்க்கும் காவிக் கம்பெனி

அதற்காக
2026 களத்தை
சென்னை சூப்பர் கிங்ஸ்க்கும்
டெல்லி டேர் டெவிலுக்குமான போட்டியாக
கட்டியமைத்து
வருகிறது..

இதற்காகவே
எடப்பாடியை ஓரங்கட்டி விட்டு
அமித்ஷாவும் பியூஷ் கோயலுமே
கூட்டணி விவகாரங்களைக் கையாண்டு வருகின்றனர்..

அவசியப்படும் போது மட்டும்
எடப்பாடியை டெல்லிக்கு வரவழைத்து
உத்தரவு போடும் எஜமானராக அமித்ஷா இருக்கிறார்...


ஆனாலும்

தங்களை ஆட்சி செய்வதற்கு
ஒரு அடிமையை தமிழக மக்கள்
தேர்வு செய்ய மாட்டார்கள் என்பது தெரிந்தும்
பா.ஜ.க. இப்படி அத்துமீறல் அரசியலை நடத்துவதற்கு
ஒரே காரணம்
அ.தி.மு.க.வை மூன்றாம் இடத்துக்குத் தள்ளி விட்டு
இரண்டாம் இடத்தை பா.ஜ.க.வுக்கு துண்டு விரிக்கவே...!

**குறிப்பு :**

**எந்தக் கூட்டத்திலும் “அ.தி.மு.க. - எடப்பாடி” என்னும் பெயர்களை மோடி மருந்துக்கும் மறந்தும் கூட உச்சரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது...**

**என்ன நாஞ் சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்